# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1973/விசாரணை/E/2019**

திரு.M.கலியவரதன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு.மு.கலியவரதன் மற்றும் திரு.ஆர்.பாலசுப்பிரமணி, பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 05.09.2018 தேதியிட்டு கள்ளக்குறிச்சி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், இருவேல்பட்டு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறந்த பதிவு செய்வது தொடர்பாக 12 இனங்களில் தகவல் வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 11.09.2018 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவை இருவேல்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் அனுப்பி வைத்துள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 29.10.2018

தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 05.03.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசியில் வாயிலாக ஆஜராகி, தான் கோரிய தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும், வழக்கினை முடித்து வைத்திட ஆட்சேபணை ஏதுமில்லை என்றும் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே 12.09.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தொடர்ந்து, இன்றும் பதிவுத்தபால் வாயிலாக தகவல்களை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

*5. ஆகவே இன்றைய விசாரணையின் முடிவில், மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும், வழக்கினை முடித்து வைத்திட ஆட்சேபணை ஏதுமில்லை என்றும் எடுத்துரைத்தன் அடிப்படையில், இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1973/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

திரு.M.கலியவரதன் த/பெ.முனுசாமி,
4, பிள்ளையார் கோவில் தெரு,
திருபுவனை & அஞ்சல், புதுச்சேரி-605 107.

Copy to: File
RJ/PS 12.11.2020